
# சிறுவர்களுக்கான சிந்தனைக் கதைகள்

1582

2



திலக்ஷி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No: F 894·8113
Acc No 1582

LENDING
ARASADY PUBLIC LIBRARY

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களுக்கான சிந்தனைக் கதைகள்



Class No:
Acc No 1582


| தலைப்பு | பக்கம் |
|---|---|
| 01. தாயின் அன்பிற்கு ஈடில்லை | 01 – 02 |
| 02. ஆசையால் வந்தவினை | 03 – 04 |
| 03. ஏமாற்றமடைந்த வேடன் | 05 – 06 |
| 04. ஒற்றுமையே பலம் | 07 – 08 |
| 05. விடாமுயற்சி | 09 – 10 |
| 06. கைம்மாறு கருதாத உதவி | 11 – 12 |
| 07. ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு | 13 – 14 |
| 08. தலைப்பாகைக்கு பதிலாக சால்வை | 15 – 16 |
| 09. பயம் | 17 – 18 |
| 10. ஆட்டுத்தோல் போர்த்திய நரி | 19 – 20 |
| 11. இரண்டு எலிகள் | 21 – 22 |
| 12. அலட்சியம் தீமை பயக்கும் | 23 – 24 |
| 13. பால்க் காரியின் பகல் கனவு | 25 – 26 |
| 14. அபியும் கிளியும் | 27 – 28 |
| 15. விலைமதிப்பற்ற சொத்து | 29 – 30 |
| 16. நல்லவர் கெட்டவர் | 31 – 32 |
| 17. தாய் சொல்லைத் தட்டாதே | 33 – 34 |
| 18. கிராமத்து நாயும் நகரத்து நாயும் | 35 – 36 |
| 19. மனம் மாறிய விது | 37 – 38 |


Arasady Public Library
Municipal Council
Batticaloa.

லோயல் பப்ளிகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு : ஒக்ரோபர் 2019

தலைப்பு : சிறுவர்களுக்கான சிந்தனைக் கதைகள் -2

பக்கங்கள் : 40

கதாசிரியர் : க.திலக்ஷி

பதிப்புரிமை : லோயல் பப்ளிகேசன்

பதிப்பு : லோயல் அச்சகம்

வெளியீடு : Loyal Publication,
125, New Moor Street,
Colombo - 12.

விலை : 120/-

தொடர்பு : **LOYAL PUBLICATION,**
No. 125, New Moor Street,
Colombo - 12.

T.P : 011 - 2433874
011 - 4280880
0777 556277




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தாயின் அன்பிற்கு ஈடில்லை

ஒரு முறை காட்டில் மிகவும் அழகான குட்டியை பெற்ற விலங்கிற்கு சிறந்த பரிசை வழங்குவேன் என்று சிங்க ராஜா அறிவித்தார். அனைத்து விலங்குகளும் ஓர் இடத்தில் கூடின. தங்கள் குட்டிகளையும் அழைத்து வந்திருந்தன.





சிங்கராஜா ஒவ்வொரு விலங்கிடமும் சென்று அவற்றின் குட்டிகளை பார்வையிட்டார். சப்பை மூக்குள்ள நரியின் குட்டியைப் பார்த்து "அப்பப்பா என்ன இந்த குட்டியின் மூக்கு" என்று ஏளனம் செய்தார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மேலும் "இதற்கு நிச்சயம் பரிசு கிடையாது" என்று அருவருப்புடன் கூறினார் சிங்கராஜா. இதனை கேட்ட நரிக்குட்டியின் தாய் மிகவும் மன வேதனை அடைந்தது. அது தன் குட்டியைப் பாசத்துடன் அணைத்துக் கொண்டது.



கவலைப்படாதே என் அன்புச் செல்லமே உன் மேல் அன்பைப் பொழிய நான் இருக்கிறேன். நீதான் எனக்கு விலைமதிப்பற்ற பரிசு. எனக்கு வேறு எந்த பரிசும் வேண்டாம் என்றது.


இதனைக் கேட்ட நரிக்குட்டி தன் தாயை கட்டி அணைத்து முத்தமிட்டது. இதனை பார்த்த சிங்கராஜா தாயின் அன்பிற்கு ஈடில்லை என்பதை உணர்ந்தார். நரிக்குட்டிக்கும் அதன் தாயிற்கும் பரிசு வழங்கி இருவரையும் மகிழ்வித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசையால் வந்த வினை

ஒரு நாள் காட்டில் "பாலு" என்ற குரங்கு மரத்தில் தொங்கி விளையாடிக் கொண்டிருந்தது. அதேவேளை "கும்கி" என்ற யானை ஒரு மரத்தை வேரோடு சாய்ப்பதற்கு கடும் முயற்சி செய்துகொண்டிருந்தது. அப்போது யானையை பார்த்த குரங்கு "நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய் ஹீ ஹீ" என்று ஏளனமாக சிரித்தது.



யானையும் குரங்கும் உரையாடத் தொடங்கின,

யானை :- ஹீம்! இதில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறது?

குரங்கு :- உன்னால் மரத்தை வீழ்த்த முடியுமா? அது உன்னால் முடியாத காரியம்.

யானை :- ம்...... பொறுத்திருந்து பார்.

குரங்கு :- ஹீம்...... பார்க்கலாம்! பார்க்கலாம்!

யானை மரத்தை சாய்ப்பதற்காக மீண்டும் மீண்டும் முயற்சி செய்து கொண்டே இருந்தது. குரங்கும் அதனை பார்த்து சிரித்துக்கொண்டே இருந்தது. இறுதியில் யானை மரத்தை சாய்த்து வீழ்த்தியது.

யானை :- உனக்கு தெரியுமா எனது தலை பலமானது. என்னால் பெரிய மரங்களையும் சாய்க்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை கேட்ட குரங்கு பாலு தனக்கும் யானை போன்ற தலை இருந்தால் தன்னாலும் எதையும் சாய்த்து வீழ்த்த முடியும் என்று நினைத்தது. உடனே அது மரத்தில் தலைகீழாக தொங்கி தவம் செய்யத் தொடங்கியது.



பாலுவின் தவத்தை கண்டு வியந்த வனக் கடவுள் பாலுவின் முன் தோன்றினார்.

வனக் கடவுள் :- பாலு நீ ஒரு குரங்கு உனக்கு யானை தலை கண்டிப்பாக அவசியம் தானா?

பாலு :- எனக்கு யானைத் தலைதான் வேண்டும்.

வனக் கடவுள் :- உன்னுடைய விருப்பம் நிறை வேறட்டும். நீ யானை தலையை பெறுவாயாக!


வனக் கடவுள் வரத்தை வழங்கி விட்டு உடனே மறைந்து போனார். குரங்கு பாலுவிற்கோ யானை தலை சுமக்க முடியாத பாரமாக இருந்தது.

"ஐயோ! என் தலை மிகவும் பாரமாக உள்ளதே! நடக்க முடியவில்லையே!" என்று அழுது கொண்டே காட்டிற்குள் சென்றது.



காட்டிற்குள் இருந்த விலங்குகள் குரங்கு பாலுவை புதிய விலங்கினமாக கண்டதால் அச்சமடைந்து அதனை அடித்து விரட்டின. பாலு காட்டை விட்டு ஓடியது. குரங்கு பாலுவினால் மீண்டும் காட்டிற்குள் வர முடியவில்லை.

# ஏமாற்றமடைந்த வேடன்




ஒரு காட்டில் ஒரு ஆண் மயிலும் ஒரு பெண் மயிலும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தன. ஒரு நாள் வேடன் ஒருவன் காட்டில் வேட்டைக்கு சென்றபோது ஆண் மயிலை பிடித்துவிட்டான். அது அழகிய மயிலாக இருந்ததால் அதனை கொன்று விடாமல் கூட்டினுள் அடைத்து வளர்த்து வந்தான்.

ஒருநாள் அவன் காட்டிற்கு புறப்பட்ட போது கூட்டினுள் இருந்த ஆண் மயில் அவனை பார்த்து "என் ஜோடியான பெண் மயில் அங்கிருக்கும். நான் இங்கு கூட்டினுள் இருப்பதாக அதனிடம் சொல்லுங்கள்" என்று கூறியது.

அவனும் காட்டிற்குள் சென்று அங்கு தனியே இருந்த பெண் மயிலை தேடி, ஆண் மயில் சொன்ன செய்தியை கூறினான். இதனை கேட்ட பெண் மயில் கவலையால் உருகி அழுது சிறிது நொடியில் கீழே விழுந்து இறந்துவிட்டது. இதனை பார்த்த வேடன் ஐயோ! இம் மயில் இறப்பதற்கு நான் காரணமாகி விட்டேனே! என்று வருந்தினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உடனே வீட்டுக்கு வந்து கூட்டிலிருந்த ஆண் மயிலிடம் பெண் மயில் இறந்த செய்தியை கூறினான். உடனே ஆண் மயிலும் கவலையால் உருகி, அழுது, துடிதுடித்து விழுந்தது. உடனே வேடன் ஐயோ! இம்மயிலும் இறப்பதற்கு நான் காரணமாகி விட்டேனே என்று வருத்தத்துடன் கூட்டை திறந்து பார்த்தான். உடனே இறந்துகிடந்த ஆண் மயில் சட்டென்று கூட்டை விட்டு வெளியே வந்தது.



வேடனை பார்த்து நானும் இறக்கவில்லை, என் ஜோடி மயிலும் இறக்கவில்லை. கூட்டில் அடைபட்ட எனக்கு தப்பும் வழியை உன்னிடமே என் ஜோடி மயில் கூறி அனுப்பியிருக்கிறது என்றது.



அது மிக மகிழ்ச்சியுடன் தன் ஜோடியை தேடிப் பறந்து சென்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமையே பலம்



ஒரு கிராமத்தில் வயதான ஏழை விவசாயி ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் தனது வயதான காலத்திலும் விவசாயம் செய்து வாழ்க்கையை நடத்தி வந்தான். ஒருமுறை வீதியில் கிடந்த மரவள்ளி தடி ஒன்றை தனது தோட்டத்தில் நட்டு வளர்த்தான்.



அது நன்றாக செழித்து வளர்ந்து வந்தது. கிழங்குகளும் நன்றாக பிடித்திருந்தன. ஒரு நாள் கிழங்கை பிடுங்கி அவித்து உண்பதற்காக விவசாயி ஆர்வமுடன் தோட்டத்திற்குச் சென்றான்.

அவன் கிழங்குகளை பிடுங்குவதற்கு முயற்சி செய்தான். எனினும் அவனால் பிடுங்க முடியவில்லை. ஐயோ! என்னால் பிடுங்க முடியவில்லையே என்று வருத்தினான். மீண்டும் மீண்டும் முயற்சி செய்தான் முடியவில்லை.



தனது மனைவியிடம் உதவி கேட்கலாம் என்று எண்ணிய அவன் மனைவியிடம் சென்று மனைவியையும் உதவிக்கு அழைத்து வந்தான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பொழுது விவசாயியும் மனைவியும் சேர்ந்து இழுத்தனர். அப்போதும் அவர்களால் பிடுங்க முடியவில்லை. என்ன செய்வது என்று தெரியாமல் இருவரும் சிந்தித்தனர். பின்னர் அயல் வீட்டுக்காரர்களிடம் உதவி கேட்கலாம் என்று முடிவெடுத்து அயல் வீட்டுக்காரர்களிடம் சென்றனர். அயல் வீட்டுக்காரர்கள் மூவர் உதவிக்கு வந்தனர். இப்பொழுது ஐந்து பேருமாக சேர்ந்து மரவள்ளி செடியை இழுத்தனர். அது பெரிய கிழங்குகளுடன் வெளியே வந்தது.

ஆ! எவ்வளவு பெரிய கிழங்குகள் என்று விவசாயி மிகவும் சந்தோசப்பட்டான். அனைவருமாக கிழங்குகளை வெட்டி அவித்து நன்றாக உண்டனர். விவசாயியும் மகிழ்ச்சியும் திருப்தியும் அடைந்தான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பின்தங்கிய கிராமத்தில் வணிகன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவனது கிராமத்திற்கும் அருகிலிருந்த நகரத்திற்கும் நடுவில் ஒரு பெரிய மலை இருந்தது. நகரத்திற்கு செல்வதற்கு அதைச்சுற்றி 50 கிலோமீற்றர் பயணிக்க வேண்டியிருந்தது.



வணிகனுக்கு அப்போது 30 வயது. ஒரு நாள் அவனது மனைவிக்கு காலில் அடிபட்டதால் நகரத்தில் உள்ள வைத்தியசாலைக்கு அடிக்கடி போக வேண்டியிருந்தது.




மலையைச் சுற்றி நகரத்துக்குச் செல்வதன் சிரமத்தை வணிகன் அனுபவித்துணர்ந்தான். மலைக்கு நடுவில் இருந்த ஒரு அடி அகலமான துவாரத்தைப் பெரிதாக்கி ஒரு பாதை அமைத்தால் இலகுவாக நகரத்திற்கு செல்லலாமே என்று யோசித்தான். எப்படியாவது அந்த மலையை வெட்டிப் பாதை அமைக்க வேண்டும் என்று முடிவெடுத்தான். அயலவர்களிடமும் இதனைக் கூறினான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது பேச்சைக் கேட்ட ஊர்மக்கள் அவனுக்கு பைத்தியம் பிடித்துவிட்டதென பழித்தனர்.



ஆனால் வணிகனோ தன் முடிவில் உறுதியாயிருந்தான். மலைக்குப் பக்கத்திலேயே குடிசை போட்டுப் பசியை மறந்து பகலிரவாக 10 வருடங்கள் உழைத்தான். இப்போது பாதை சற்றுப் பெரிதாகி விட்டது. ஆரம்பத்தில் ஏளனம் செய்த ஊர் மக்கள் ஒவ்வொருவராக உதவிக்கு வரத் தொடங்கினர்.



அனைவரும் சேர்ந்து கடுமையாக உழைத்ததால் அந்த மலையூடாக 16 அடி அகலத்தில் புதிய பாதை தயாரானது. வணிகனின் அளவற்ற பொறுமைக்கும் அயராத உழைப்புக்கும் பலன் கிடைத்தது. விடாமுயற்சி இருந்தால் மலையைக் கூட அசைக்க முடியும் என்பதை சாதித்துக் காட்டினான் வணிகன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைம்மாறு கருதாத உதவி

நாராயணன் தீவிரமான இறை பக்தர். மிகவும் இரக்க சுபாவம் உடையவர். ஒரு நாள் ஒரு ஆற்றங் கரையோரமாக தன் மனைவியுடன் யாத்திரை சென்று கொண்டிருந்தார். அப்போது கோபி என்ற ஏழை சிறுவன் அவ்வழியே பலூன் விற்று பணம் சம்பாதித்துக் கொண்டிருந்தான்.

அப்போது நாராயணன் "ஆகா! ஆகா! இந்த ஆறு என்ன வேகமாக பாய்கின்றது பார்" என்று மனைவிக்கு காட்டினார். ஆற்றின் அருகில் நின்ற மனைவி கால் தவறி ஆற்றில் விழுந்தாள். ஆற்று நீரால் அவரது மனைவி அடித்துச் செல்லப்பட்டாள்.

"ஐயோ! யாராவது காப்பாற்றுங்களேன். ஐயோ! என் மனைவியை யாராவது காப்பாற்றுங்களேன்" என்று பதட்டத்துடன் கூக்குரலிட்டார் நாராயணன்.

பலூன் விற்று கொண்டிருந்த சிறுவன் கோபி உடனே ஆற்றில் பாய்ந்து நாராயணனின் மனைவியை காப்பாற்றி கரைக்கு கொண்டுவந்தான்.

இதனை ஏனைய அனைவரும் சுற்றியிருந்து வேடிக்கை பார்த்தனர். எனினும் கோபி எந்த மாற்றமுமின்றி உடனே தனது வியாபாரத்தை கவனிக்க தொடங்கினான்.

தன் மனைவியை காப்பாற்றிய சிறுவன் கோபியின் துணிச்சலை பார்த்து நாராயணன் வியந்து போனார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனே கோபியிடம் சென்று "என் உயிரே சென்று வந்தது போலிருந்தது" என்று கூறினார். அவனுக்கு பரிசாக தன் பணப்பையை அவனிடம் கொடுத்து "எவ்வளவு பணம் வேண்டுமானாலும் எடுத்துக் கொள் என்றார்."

சிறுவன் கோபியோ, "எனக்கும் என் அம்மாவிற்கும் நான் பலூன் விற்று பெறும் வருமானமே போதுமானது" என்றான்.


சிறுவனின் கைம்மாறு கருதாத உதவியை பார்த்து நெகிழ்ந்து போனார் நாராயணன்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு



முன்னொரு காலத்தில் நம்பி என்ற வியாபாரி ஒருவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு நான்கு ஆண்பிள்ளைகள் இருந்தார்கள். அவர்கள் அனைவரும் திருமணம் முடித்தவர்கள். எனினும் நால்வரும் தமது குடும்பங்களுடன் ஒற்றுமையாக ஒரே வீட்டில் வாழ்ந்து வந்தனர். இதனைக் கண்ட ஊர் மக்கள் நம்பி தன் பிள்ளைகளை நன்றாக வளர்த்து இருக்கிறார் என்று பேசிக் கொண்டனர்.



ஆனால் ஊரில் இருந்த ஒருவன் மாத்திரம் இவர்களது ஒற்றுமையையும் மகிழ்ச்சியான வாழ்வையும் கண்டு பொறாமையடைந்தான். சகோதரர்கள் நால்வரையும் எப்படியாவது பிரிக்க வேண்டுமென எண்ணினான்.

ஒரு நாள் சகோதரர்கள் நால்வரும் தந்தை நம்பியின் காணி ஒன்றை தமக்கிடையே பங்கிடும் போது சண்டைபோட்டுக் கொண்டனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சரியான சந்தர்ப்பம் பார்த்திருந்த பொறாமைக்காரன் ஒருவரைப்பற்றி மற்றயவரிடம் கோள் சொல்லி சண்டையை பெரிதாக்கி விட்டான். இதனால் சகோதரர்கள் பிரிந்து சென்று தனித்தனியே வாழத் தொடங்கினர். இதனை பார்த்த பொறாமைக்காரன் நல்ல மகிழ்ச்சியடைந்தான்.

ஆனால் நம்பியோ தன் பிள்ளைகளின் நிலையை கண்டு மிகவும் மனம் வருந்தினார். உடனே நால்வரையும் அழைத்து புத்திமதி கூறினார். பொறாமைக்காரனின் தந்திரமான திட்டங்களை அவர்களுக்கு விளக்கிக் கூறினார்.

ஒற்றுமையின்றி சண்டை போட்டால் பொறாமைக்காரர்கள் எவ்வாறு தவறாக தம்மை பயன்படுத்துவார்கள் என்பதை சகோதரர்கள் உணர்ந்து கொண்டனர்.




அவர்கள் மீண்டும் ஒரே வீட்டில் ஒற்றுமையாக வாழத்தொடங்கினர். நம்பி மிகுந்த ஆறுதல் அடைந்தார். பொறாமைக்காரனோ ஏமாற்றம் அடைந்தான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 08 தலைப்பாகைக்கு பதிலாக சால்வை




மாதவன் ஒரு ஏழ்மையான மனிதன். அதிகம் கற்காதவன். எனினும் அவனை புத்தி சாதுரியக்காரன் என ஊர் மக்கள் நம்பினர்.

ஒரு நாள் மாதவன் ஒரு துணிக் கடைக்குச் சென்றான். அக்கடையில் தலைப்பாகைகளும் சால்வைகளும் விற்கப்பட்டன. மாதவன் சால்வை ஒன்றை வாங்க விரும்பினான். எனினும் அவனிடம் பணம் இருக்கவில்லை. எப்படியாவது ஒரு சால்வையை வாங்கிவிட வேண்டும் என திட்டமிட்டான்.



உடனே தலைப்பாகை ஒன்றை எடுத்து தன் தலையில் வைத்து அழகு பார்த்துக் கொண்டான். பின்னர் கடைக்காரரைப் பார்த்து "இந்த தலைபாகைக்கு பதிலாக சால்வையை வாங்கிக் கொண்டால் என்ன?" என்று கேட்டான். உடனே கடைக்காரர், "இரண்டும் ஒரே விலைதான் உங்கள் விருப்பம் போல எதை வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளுங்கள்" என்றார்.




மாதவன் தலையில் இருந்த தலைபாகையை கழற்றி கடைக்காரரிடம் கொடுத்து விட்டு சால்வை ஒன்றை எடுத்துக்கொண்டு புறப்பட்டான்.



Class No: F 894.8113
Acc No: 1582

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடைக்காரரோ, "ஐயோ! நீங்கள் வாங்கிய சால்வைக்கு பணம் கொடுக்கவில்லையே?" என்று கேட்டார்.

அதற்கு மாதவன் "தலைபாகைக்கு பதிலாகத் தானே சால்வையை வாங்கினேன்" என்று பதிலளித்தான். இதை கேட்ட கடைக்காரர், "அப்படியானால் நீங்கள் வாங்கிய தலைப்பாகைக்கு பணம் கொடுங்களேன்" என்று கேட்டார். மாதவனோ, "தலைப்பாகையை தான் உங்களிடம் திருப்பித் தந்து விட்டேனே" என்று கூறி விட்டு கடையை விட்டு வெளியேறினான்.



கடைக்காரருக்கு ஒன்றுமே புரியவில்லை. என்ன செய்வது என்று தெரியாமல் குழம்பிப் போனார். சற்று நேரத்தின் பின்னர் தான் ஏமாந்து விட்டதை உணர்ந்து கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பயம்

குமார் என்ற சிறுவன் ஒரு நாள் காட்டு வழியே பயணம் செய்தான். நீண்ட தூரம் பயணித்ததால் அவனுக்கு பசி ஏற்பட்டது. அப்போது ஒரு உயர்ந்த மரத்தின் உச்சிக் கிளையில் பழங்கள் இருப்பதை கண்டான். உடனே அம்மரத்தின் மீது ஏறி அதன் உச்சிக்குச் சென்றான். அப்போது அவன் இருந்த கிளை முறிந்துவிட்டது. சட்டென்று அவன் வேறு கிளையை பிடித்துக் கொண்டு தொங்க ஆரம்பித்தான்.




குனிந்து பார்த்தால் தரை மிகவும் கீழே இருந்தது. பயந்துப்போன அவன், "என்னை யாராவது காப்பாற்றுங்களேன்" என்று அழுந்தான்.

அப்போது அந்தப் பக்கமாக வந்த முதியவர் ஒருவர் குமாரைப் பார்த்தார். அவனோ மிகவும் உயரத்தில் இருந்தான். முதியவருக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. சற்று நேரம் யோசித்தார். உடனே கல்லொன்றை எடுத்து அவனை நோக்கி எறிந்தார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குமாருக்கோ கோபம் பொத்துக் கொண்டு வந்தது. ஆனால் முதியவரோ, திரும்பியும் கல்லொன்றை எடுத்து குமாரை நோக்கி வீசினார். இதனால் முதியவர் மீது தாங்கமுடியாத கோபமடைந்த குமார் விடுவிடுவென மரத்தை விட்டு இறங்கி வந்து முதியவரை திட்டித்தீர்த்தான்.

பொறுமையோடு இருந்த முதியவர் தனது கையிலிருந்த அடுத்த கல்லை குமாரின் கையில் வைத்தார்.

அவனை பார்த்து சிரித்துக் கொண்டே, "தம்பி நான் உன்னை பார்த்தபோது நீ பயத்தில் இருந்தாய் அதனால் உன்னால் செயற்படமுடியவில்லை. எனக்கோ வயதாகி விட்டது, என்னாலும் மரத்தில் ஏறமுடியாது. அதனால் உனது பயத்தைப் போக்க கல்லால் எறிந்தேன். நீயோ கோபமடைந்ததால் பயத்தை மறந்தாய். இதனால் நீயே கீழே இறங்கி வந்து உன்னை காப்பாற்றிக் கொண்டாய்" என்றார்.

பெரியவரின் புத்திக்கூர்மையை உணர்ந்து கொண்ட சிறுவன் அவரிடம் மன்னிப்புக் கேட்டு நன்றி கூறி விடைபெற்றுச் சென்றான்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்டுத்தோல் போர்த்திய நரி

நரி ஒன்று உணவு தேடி அலைந்து திரிந்தது. அது மேய்ந்து கொண்டிருந்த ஆட்டுமந்தை ஒன்றை தொலைவில் கண்டது. ஆட்டுமந்தையை நோக்கி மெதுவாக நகர்ந்து சென்றது. அப்போது இறந்து போன ஒரு ஆட்டின் தோலைக் கண்டது. உடனே நரியின் மூளை வேலை செய்ய தொடங்கியது.



Arasady Public Library
Municipal Council
Batticaloa.

இந்த ஆட்டுத்தோலை கவசமாக போர்த்திக் கொண்டு ஆடுபோல உருமாறினால் ஆட்டுமந்தைக்குள் புகுந்து ஓர் ஆட்டை தூக்கிச்சென்று உண்ணலாம் என நரி திட்டமிட்டது. நரி தான் நினைத்தது போல ஆட்டுத்தோலை போர்த்திக் கொண்டு ஆட்டு மந்தைக்குள் புகுந்து கொண்டது.

இடையன் ஆட்டுமந்தையை விட்டு வீட்டுக்கு புறப்பட்டு செல்லும் வரை நரி காத்திருந்தது. ஆனால் இடையனுக்கோ அன்று சம்பள நாள். அதனால் அவன் ஆடுகளை பட்டியில் அடைத்து விட்டு முதலாளி வரும் வரை காத்திருந்தான்.

சற்று நேரத்தில் முதலாளியும் அவசர அவசரமாக வந்து சேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று ஒரு வியாபாரம் உள்ளது அதனால் பட்டியிலுள்ள ஆடுகளில் ஒரு கொழுத்த ஆட்டை பிடித்து, அதனை கொன்று எனது வண்டியில் ஏற்றிவிடு என்று இடையனுக்கு முதலாளி கட்டளையிட்டார்.



ஆட்டை பிடிக்க பட்டியினுள் வந்த இடையன் கொழுத்த ஆட்டை தேடினான்.



ஆட்டுதோலை போர்த்தியிருந்த நரியே அவனுக்கு கொழுத்த ஆடாகத் தென்பட்டது. உடனே அவன் அதனை பிடித்து, கொன்று முதலாளியின் வண்டியில் ஏற்றிவிட்டான்.



முதலாளியும் இடையனுக்கு சம்பளம் வழங்கிவிட்டு புறப்பட்டு சென்றார். அன்று இரவு முதலாளியின் வீட்டுக்கு அருகில் இருந்த மிருகக்காட்சி சாலையில் சிங்கத்துக்கான உணவானது ஆட்டுத்தோல் போர்த்திய நரி.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இரண்டு எலிகள்

ஒரு நாள் பால்குடம் ஒன்றில் பாலைக் குடிப்பதற்கு சென்ற இரண்டு எலிகள் தவறி பானையினுள்ளே விழுந்துவிட்டன.




அவை குடத்தினுள் சுற்றிச் சுற்றி நீந்தி வெளியேற முயற்சித்தன. ஆனால் கால்களை வைத்து உந்த பலமான ஆதாரம் இல்லை. ஆகையால் எலிகளால் வெளியில் தாவிக் குதிக்க முடியவில்லை. சிறிது நேரம் கழித்து ஒரு எலி என்னால் முடியாது நான் களைத்து விட்டேன் என்றது. பாவம் தன் முயற்சியை கைவிட்டதால் பாலினுள்ளே மூழ்கி இறந்து போனது.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மற்றைய எலியோ நீந்துவதை நிறுத்தாமல் தொடர்ந்து முயற்சி செய்துகொண்டே இருந்தது. அதிசயமாக ஏதாவது நடந்தாவது நான் பிழைத்துவிடுவேன் என்று தனக்குத்தானே நம்பிக்கை அளித்துக் கொண்டது.



தொடர்ந்தும் அது நீந்திக் கொண்டே இருந்தது. நீண்ட நேரம் பாலினுள் நீந்தியதால் பால் கடைந்தெடுக்கப்பட்டு வெண்ணெயாக திரண்டது. வெண்ணை திரட்சியாக இருந்ததால் அதன் மேல் காலை வைத்து குடத்திற்கு வெளியே எம்பிக் குதித்த எலி உயிர் பிழைத்த மகிழ்ச்சியில் தன் இருப்பிடம் சென்று சேர்ந்தது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலட்சியம் தீமை பயக்கும்


ஓர் அடர்ந்த காட்டில் பல பறவைகள், மிருகங்கள் என்பன வாழ்ந்து வந்தன. அக்காட்டில் ஓர் பெரிய ஆலமரத்தில் இரண்டு மைனாக்கள் கூடுகட்டி முட்டை இட்டு குஞ்சுகள் பொரித்தன.





ஆண் மைனாவும் பெண் மைனாவும் எப்பொழுதும் ஒன்றாகவே இரைதேடச் செல்லும். எனினும் குஞ்சுகள் பொரித்ததால் குஞ்சுகளை விட்டு பெண் மைனாவால் வெளியே செல்ல முடியவில்லை. இதனால் ஆண் மைனா மட்டும் தனியே இரைதேடச் செல்லும் நிலை ஏற்பட்டது.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு சில நாட்கள் கழிந்தன. நாட்கள் செல்லச் செல்ல பெண் மைனாவுக்கும் ஆண் மைனாவுடன் வெளியே பறந்து செல்ல ஆசை ஏற்பட்டது. ஒரு நாள் இரண்டு மைனாக்களும் தமது குஞ்சுகளை தனியே விட்டுவிட்டு இரைதேட பறந்து சென்றன.

சந்தர்ப்பம் பார்த்து காத்திருந்த பருந்து ஒன்று விரைந்து சென்று மைனாக் குஞ்சுகளை தூக்கிச் சென்றது.

வெளியே சென்ற இரண்டு மைனாக்களும் கூடு திரும்பியபோது தமது குஞ்சுகளை காணாது தவித்தன. பதறி அடித்து அங்குமிங்கும் தேடின. ஆயினும் குஞ்சுகளை எங்குமே காணவில்லை.

அவை தமது குஞ்சுகளை தனியே விட்டு அலட்சியமாக வெளியே சென்றது தவறு என்பதை உணர்ந்தன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பால்க்காரியின் பகல் கனவு




ஒரு விவசாய கிராமத்தில் ஒரு ஏழை பால்க்காரி வாழ்ந்து வந்தாள். அவளுக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. தான் அழகானவள் என்றும் அழகிய சேலை அணிந்தால் அதிக ஆடவர் தன்னை விரும்பி திருமணம் செய்ய வருவர் என்றும் அவள் எண்ணினாள். ஆனால் ஏழை என்பதால் ஒரு சேலையைக் கூட அவளால் வாங்க முடியவில்லை.


ஒரு நாள் அவள் வழமைபோல பால்க் குடம் ஒன்றை தலையில் வைத்துக் கொண்டு பால் வியாபாரம் செய்யப் புறப்பட்டாள். அவள் நடந்து சென்று கொண்டிருந்தபோது தன் திருமணம் பற்றி கற்பனை செய்ய தொடங்கினாள்.

"இந்தப்பாலை விற்று வரும் பணத்தில் ஓர் பசு வாங்குவேன், அந்தப்பசு மேலும் பால் தரும், இப்பொழுது உள்ளதை விட அதிக பாலை அதில் கறப்பேன், அந்தப் பாலையும் விற்று நான் ஒரு பட்டுச் சேலையை வாங்குவேன், அச்சேலையை கட்டி கொண்டு நான் மிக அழகாக இருப்பேன், அழகிய பல வாலிபர்கள் என்னை திருமணம் செய்து கொள்ள போட்டி போட்டுக்கொண்டு வருவார்கள்,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஆனால் நான் தலையை பலமாக அசைத்து முடியாது என்பேன்" என்றெல்லாம் கற்பனை செய்தவள் அக்கற்பனையால் தன்னையே மறந்து தன் தலையை முடியாது! முடியாது! ் என்று பலமாக ஆட்டினாள்.


உடனே அவள் தலையில் இருந்த குடம் கீழே விழுந்தது. குடத்தில் இருந்த பாலும் தரையெங்கும் கொட்டியது. அத்தோடு பால்காரியின் பகல் கனவும் கலைந்து போனது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபியும் கிளியும்



அபி என்னும் சிறுவன் ஒரு கிளியை தனது வீட்டில் வளர்த்து வந்தான். அது வீட்டை விட்டு எங்கும் பறந்து விடாமல் இருப்பதற்காக அதன் சிறகுகளை வெட்டி கூட்டில் அடைத்து வைத்திருந்தான். கிளிக்கு தினமும் உணவு வழங்கி வந்ததோடு கிளி பேசுவதையும் கேட்டு மகிழ்வான். கிளியும் அபியின் மேல் மிகவும் பாசம் கொண்டு வளர்ந்து வந்தது.




அபியின் பெயரையும் அபி! அபி! என அழகாகச் சொல்லும். ஓர் நாள் அபி இரவு உணவு உண்ண தயாரானான். அப்போது கிளியின் கூட்டை திறந்து விட்டான். கிளியும் தனது கூட்டிலிருந்து இறங்கி அபியை நோக்கி வந்தது. அபியும் அதற்கான உணவை அதன் தட்டில் வைக்க நன்றாக கொத்திக் கொத்தி உண்டது.

அபி சாப்பிட்டு முடித்து எழும்பி கை கழுவ வெளியே சென்றான். திடீரென ஒரு நாய் கிளியை பிடிக்கப் பாய்ந்து வந்தது. கிளியின் சிறகுகள் வெட்டப் பட்டிருந்ததால் கிளியால் பறக்க முடியவில்லை. அதனால், நாய் கிளியை கௌவிச் சென்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








கிளியின் அலறல் சத்தம் கேட்டு அபி ஓடி வந்து பார்த்தான். கிளியைக் காணவில்லை. எங்கு தேடியும் கிளி கிடைக்கவில்லை. இறுதியில் தான் பாசமாக வளர்த்த கிளி பரிதாபமாக இறந்து கிடப்பதை கண்டு கதறிக் கதறி அழுதான்.

கிளியின் சிறகுகளை வெட்டியதால்தான் நாயிடமிருந்து கிளியால் தப்ப முடியவில்லை என்பதை உணர்ந்தான்.



அபியின் தந்தையும் அவனுக்கு புத்திமதி புகட்டினார். பிராணிகளை துன்புறுத்தக் கூடாது, எமது மகிழ்ச்சிக்காக பிராணிகளை கூட்டில் அடைக்கக் கூடாது என்பதை அபிக்கு தெளிவுபடுத்தினார். அபியும் தன் தவறை உணர்ந்தார்.

தன்னைப்போல் கிளிகளை கூட்டில் அடைத்து வளர்த்த தன் நண்பர்களிடம் இவற்றைக் கூறி அக்கிளிகளை கூட்டிலிருந்து விடுவித்து சுதந்திரமாக பறக்கவிட்டான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலைமதிப்பற்ற சொத்து



கவிதாவும் விமலும் உடன்பிறந்த சகோதரர்கள். அவர்களுக்கு வயதான பெற்றோர் இருந்தனர். இருவரும் தமது தாய், தந்தை மேல் மிகுந்த பாசமுடையவர்கள். ஓர் நாள் அனைவரும் மதிய உணவருந்திக் கொண்டிருந்தனர். அப்பொழுது ஒலி பெருக்கியில் புயல் காற்று வரப்போவதாகவும் மக்கள் தங்களுக்கு தேவையானதை எடுத்துக் கொண்டு பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.





அச் செய்தியை கேட்ட மக்கள் அனைவரும் பயத்தால் திகைத்துப் போய்விட்டனர். ஆனாலும் தங்களுக்குத் தேவையான உணவுகளை எடுத்துக் கொண்டனர் சிலர்.



சிலர் ஆடை ஆபரணங்களை மூட்டை கட்டி வைத்தனர். இன்னும் சிலர் தாங்கள் சேர்த்த பணத்தினை எடுத்துக் கொண்டனர்.



மீண்டும் அவசர எச்சரிக்கை விடுக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இடியுடன் கூடிய மழையும் பெரு வெள்ளமும் ஏற்படப் போவதாக அறிவிக்கப்பட்டது. ஒவ்வொருவரும் தாங்கள் எடுத்த பொருட்களை கொண்டு பாதுகாப்பர்ன இடத்திற்குச் சென்றனர்.



கவிதா தனது தாயையும் விமல் தனது வயதான தந்தையையும் தூக்கிக் கொண்டு சென்றனர்.

அப்போது இவர்கள் இருவரையும் பார்த்து சிலர் கேளியாக சிரித்தனர். அப்போது ஒருவர் விமலைப் பார்த்து "எல்லோரும் உணவு, பணம், நகை, வேறு பொருட்கள் எடுத்துக் கொண்டு வருகிறார்கள், நீங்களோ வயதானவர்களை தூக்கிக் கொண்டு வருகிறீர்களே!" என்றார்.


அதற்கு விமல் எங்கள் விலைமதிப்பற்ற சொத்தே எமது பெற்றோர்தான் என்றான். இதனை கேட்ட அவர் வாயடைத்துப்போய் நின்றார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16 நல்லவர் கெட்டவர்



ஒரு சமயம் கர்ப்பமாக இருந்த தாய் மகளிடம் கேட்டாள், "உனக்கு தம்பி வேண்டுமா? அல்லது தங்கை வேண்டுமா?" என்று.

மகள் "தம்பி வேண்டும்" என்றாள்.

"யாரைப் போல் தம்பி இருக்க வேண்டும்" என்று தாய் கேட்டாள். "இராவணனைப் போல் இருக்க வேண்டும்" என்றாள் மகள்.



திடுக்கிட்ட தாய் "உனக்கு பைத்தியம் பிடித்திருக்கிறதா என்ன? இராமனைப்போல் ஒரு சகோதரன் வேண்டும் என்று சொல்லாமல் இராவணனைப்போல் வேண்டும் என்கிறாயே" என்றாள்.



அம்மா நான் சொன்னதில் என்ன தவறு இருக்கிறது? உடன்பிறந்த சகோதரி அவமானப்பட்டாள் என்பதற்காக இராவணன் தன் அரியணை, ராஜ்ஜியம், உயிர் அனைத்தையும் இழந்தானே!



தன் எதிரியின் மனைவியை சிறைப்பிடித்த போதிலும் அவளை ஒரு போதும் தீண்டவில்லையே என்றாள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இராமனோ, யாரோ சொன்னான் என்பதற்காக தன் மனைவியை தீக்குளித்து அவளது புனிதத்தை நிரூபிக்கச் சொன்னானே. இதில் எவர் நல்லவர்? எவர் கெட்டவர்?



உனக்கு வேண்டுமானால் இராமனைப் போல் மகன் பிறக்கட்டும். எனக்கு இராவணன் போன்ற சகோதரன்தான் வேண்டும் என்றாள் மகள். மகளின் அறிவுத்திறனைப் பார்த்து தாயால் பதில் கூறமுடியவில்லை.

நல்லவர் கெட்டவர் என்பது அவரவர் தனிப்பட்ட அனுமானங்களினால் ஏற்படும் முடிவு என்பதை தாயார் உணர்ந்தார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தாய் சொல்லைத் தட்டாதே

ஒரு தாய்க்கோழி அடைக்காத்து ஐந்து குஞ்சுகளைப் பொரித்தது. பார்ப்பதற்கு ஐந்து குஞ்சுகளும் அழகாக இருந்தன. அதில் ஒரு குஞ்சு வெள்ளை நிறமுடையது. குஞ்சுகள் ஓரளவு வளர்ந்து வந்தன.






ஒரு நாள் தாய்க்கோழி குஞ்சுகளைக் கூட்டிக் கொண்டு உணவு தேடச் சென்றது. கோழிக் குஞ்சுகளைக் கண்ட பருந்து ஒன்று குஞ்சுகள் இருக்கும் திசை நோக்கி பறந்து வந்தது. அப்போது தாய்க் கோழி எல்லாக் குஞ்சுகளையும் தன் செட்டைக்குள் வந்து ஒளியுங்கள் இல்லை என்றால் பருந்து உங்களைப் பிடித்து விடும் என்றது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குஞ்சுகள் தாயின் செட்டைக்குள் வந்து ஒளிந்தன. ஆனாலும் வெள்ளைக் குஞ்சு மட்டும் தாய் சொல்லைக் கேட்கவில்லை. அது தனியே அங்குமிங்கும் ஓடியது. பருந்து விரைந்து வந்து வெள்ளைக் குஞ்சைத் தூக்க தாய்க்கோழி உடனே தன் சக்தியையும் மீறி பறந்துவந்து பருந்துடன் சண்டையிட்டது. இதனால் பருந்தின் பிடியிலிருந்த வெள்ளைக் குஞ்சு கீழே விழுந்து உயிர் தப்பியது.




பயந்துபோன வெள்ளைக் குஞ்சு ஓடிச்சென்று தாய்க்கோழியின் சிறகுகளுக்குள் ஒளிந்து கொண்டது. இதன் மூலம் தாய் சொல்லைத் தட்டக்கூடாது என்பதை அனைத்து குஞ்சுகளும் புரிந்துகொண்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18 கிராமத்து நாயும் நகரத்து நாயும்

நகரத்து நாய் ஒன்று ஒரு சமயம் தன் எஜமானுடன் கிராமத்துக்குப் போனது. அங்கே தனது பழைய நண்பனைப் பார்த்த கிராமத்து நாய் தன்னிடமிருந்த சோறு, கறி, மீன் போன்றவற்றை உண்ணும்படி கூறியது.




நகரத்து நாய் இதில் ஒன்றும் அதில் ஒன்றுமாக முகத்தைச் சுளித்தவாறு உண்டது. ஆடம்பரமான எனது வாழ்வை வந்து பார் என்று கூறி கிராமத்து நாயை நகரத்துக்கு அழைத்தது.

ஒரு நாள் கிராமத்து நாய் நகரத்திற்குச் சென்றது. அங்கே பிரமாண்டமான கட்டடங்களைக் கண்டு வியந்தது.

Class No
Acc No








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரத்து நாயின் உண்ணும் மேசையில் விதவிதமான இறைச்சித் துண்டுகள், ரொட்டி, கேக், முட்டை, ஐஸ்கிரீம், பிஸ்கட் என்பன இருந்தன. இரண்டு நாய்களும் அவற்றை விரும்பி உண்ண ஆரம்பித்தன.

அப்போது அங்கு வந்த நகரத்து நாயின் எஜமான் நகரத்து நாயை அழைத்து சங்கிலியால் கட்டினார். சாப்பிட்டதும் சாப்பிடாததுமாக நகரத்து நாய் கூண்டில் அடைக்கப்பட்டது.



இதை பார்த்த கிராமத்து நாய் வாழ்க்கையில் சுதந்திரமும் நிம்மதியும் கிராமத்து வாழ்க்கையில்தான் கிடைக்கிறது. ஆடம்பரமான நகரத்து வாழ்க்கையை விட சுதந்திரமான கிராமத்து வாழ்க்கையே மேலானது என்று கூறி கிராமத்தை நோக்கி ஓடியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் மாறிய விது



விது ஒரு பள்ளிச் சிறுமி. அவளுக்கு பிராணிகள் என்றாலே பயம். அதனால் அவள் பிராணிகள் மீது விருப்பம் காட்டுவதில்லை. ஒரு நாள் விது பள்ளிச் சுற்றுலா ஒன்றுக்கு சந்தோசமாக புறப்பட்டுச் சென்றாள்.

மதியம் மலைப் பாங்கான இடத்தின் மரத்தடியில் உணவு உண்ண அனைவரும் உட்கார்ந்தனர். அங்கிருந்த ரோஜாப் பூக்கள் நிறைந்த அழகான பூந்தோட்டம் ஒன்றை அவள் அவதானித்தாள். அதன் அழகில் மயங்கிய அவள் உணவை மறந்துவிட்டு அப்பூந்தோட்டத்தை பார்க்க தனியே சென்றாள். அதனைப் பார்த்து அதன் அழகில் தன்னையே மறந்தாள்.




ரோஜாப்பூக்களின் மீது பல வர்ணங்களை ஆடையாகக் கொண்ட பட்டாம் பூச்சிகள் சிறகுகளை அசைத்தவாறு அமர்ந்து இருந்தன. அது விதுவை மிகவும் கவர்ந்தது. பட்டாம் பூச்சி ஒன்றை பிடிப்பதற்காக அவள் அங்கும் இங்கும் ஓடித்திரிந்தாள். அவளால் பிடிக்க முடியவில்லை.

சிறிது நேரத்தின் பின்னர்தான் அனைவரையும் விட்டு பிரிந்து தனியே இருப்பதை உணர்ந்தாள். அருகில் எவருமே இல்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விதுவிற்கு பயம் தொற்றிக்கொண்டது. சிறுமியை கண்டதும் குரங்குகள் வந்து வேடிக்கை பார்த்தன. ஆனால் விதுவிற்கோ குரங்குகளை பார்க்க பயமாக இருந்தது. கதறி அழ ஆரம்பித்தாள்.

அதனை பார்த்த குரங்குகள் சிறுமி பசியினால் தான் அழுகிறாள் என்று நினைத்து மரத்தின் மீது ஏறி நிறையப் பழங்களைப் பறித்து அவளிடம் போட்டன. விதுவிற்கும் பசி அதிகமாக இருந்தபடியால் பழங்களை எடுத்து சாப்பிட ஆரம்பித்தாள். அவளுக்கு கொஞ்சம் தெம்பு வந்தது. பயமும் குறைந்தது.



பசியாறியதும் அவள் குரங்குகளை விரும்ப ஆரம்பித்தாள். முயல் குட்டிகள் அவளோடு விளையாட வந்துவிட்டன. பச்சைக் கிளிகள் அவளைச் சுற்றிப் பறந்தன. அவளது தனிமையையும் பயத்தையும் அப்பிராணிகள் போக்கின. விது மிகுந்த சந்தோசம் அடைந்தாள்.



மரத்தடியில் சாப்பிட்டு முடித்தவுடன் ஆசிரியர்கள் விதுவைத் தேடினர். அவள் பிராணிகளுடன் தனியே விளையாடுவதைக் கண்டனர். பெரியவர்களைக் கண்டதும் பிராணிகள் ஓடி ஒளிந்து கொண்டன. விதுவை அவர்கள் அழைத்துச் சென்றனர். அன்றிலிருந்து விது பிராணிகளை நேசிக்க ஆரம்பித்தாள்.



Arasady Public Library
Municipal Council
Batticaloa.
Class No:
Acc No 158

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1582

| Class No: | F 894.8113 |
| --- | --- |
| Acc No | 1582 |

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1. தாயின் அன்பிற்கு ஈடில்லை
2. ஆசையால் வந்த வினை
3. ஏமாற்றமடைந்த வேடன்
4. ஒற்றுமையே பலம்
5. விடா முயற்சி
6. கைம்மாறு கருதாத உதவி
7. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
8. தலைப்பாகைக்கு பதிலாக சால்வை
9. பயம்
10. ஆட்டுத்தோல் போர்த்திய நரி
11. இரண்டு எலிகள்
12. அலட்சியம் தீமை பயக்கும்
13. பால்காரியின் பகல் கனவு
14. அபியும் கிளியும்
15. விலைமதிப்பற்ற சொத்து
16. நல்லவர் கெட்டவர்
17. தாய் சொல்லை தட்டாதே
18. கிராமத்து நாயும் நகரத்து நாயும்
19. மனம் மாறிய விது


Price 120/-


PBD
407013651
SIRU.SINTH.KATHAGAL B-2
100320
Rs. 120.00



L PUBLICATION
, New Moor Street, Colombo - 12.
2433874, 011-4280880, 0777 556277



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org